IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, VADIPATTI.

| | | | |
|---|---|---|---|
| DEPOSITION OF WITNESS | | C.C.No | 1/2018 |
| | | PW's | 2 |
| NAME | Muthu | CASTE | |
| S/O / W/O | Paulchmay | RELIGION | |
| VILLAGE | | CALLING | |
| TALUK | | AGE | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 01th day of April 2019

முதல் விசாரணை: 01-04-2019

நான் திருப்பாச்சேத்தியில் வசித்து வருகிறேன். 27-3-2013ம் தேதி திருப்பாச்சேத்தி காமாட்சி அம்மன் கோவிலில் 1ம் எதிரிக்கு எனது மகளான அசா1 திருமணம் செய்து ˙வைத்தேன். திருமணத்தின்போது அவருக்கு 13 பவுன் நகையும் ரூபாய் 50,000 (ஐம்பதாயிரம்) ரொக்கமும் சீாவரிசையும் சீதனமாக கொடுத்திருந்தோம். பின்னா் எனத மகள் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தாா். மூன்று மாதங்கள் என் மகள் அங்கு இருந்தாா் பின்னா் 4 மற்றும் 5 எதிரிகள் (சுமதி, பாண்டியம்மாள்) சோ்ந்து எனது மகளை இரண்டு கையிலும் சூடு வைத்தாா்கள். ஆட்டோ வாங்கி கொடுக்கத்தான் இந்த சூடு வைத்தாா்கள். ஆட்டோ வாங்கி வரச்சொல்லி என் மகளை கொடுமைப்படுத்தினா். பின்னா் எனது மகள் எனது வீட்டிற்கு வந்து விட்டாா் பின்னா் எனது அண்ணனுடன் சோ்ந்து பிரசிடன்ட் ஞானபண்டிதன் என்பவருடனும் சோ்ந்து பஞ்சாயத்து பேசினோம். பஞ்சாயத்தில் உடன்பாடு ஏற்படவில்லை. அப்போது சிறய தகராறு ஆகி1ம் எதிரி சோழவந்தான் காவல்நிலையத்தில் புகாா் செய்தாா். எனது மகள் புகாா் எதுவும் கொடுக்கவேண்டாம் என்று சொல்லி நான் அழைத்து வந்து விட்டேன். பின்னா் மானா மதுரை காவல்நிலையம் சென்று புகாா் கொடுத்தோம். எனது மகளையும் மாப்பிள்ளையும் அழைத்து பேசினாா்கள். நகையும், பணத்தையும் காவல் நிலையத்தில் தருவதாக ஒப்புக்கொண்டாா். பின்னா் எதுவும் தரவில்லை. பின்னா் மானாமதுரை அனைத்து மகளிா் காவல்நிலையத்தில் புகாா் செய்தாா்கள். சோழவந்தானில் குடும்பம் நடத்தியததால் வழக்கை அங்கு மாற்றினாா்கள். இது சம்பந்தமாக போலிசாா் என்னை விசாரித்தாா்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:

போலிஸ் விசாரணையில் 4 மற்றும் 5 எதிரிகள் (சுமதி, பாண்டியம்மாள்) சோ்ந்து என் மகளை சூடு வைத்ததை நான் குடும்பம் கெட்டுப்போகும் என்பதால் நான் சொல்லவில்லை. சமயநல்லூா் போலிஸ் விசாரணையில் எனது அண்ணன், பிரசிடண்ட் ஞானபண்டிதன் பஞ்சாயத்து செய்த விவரத்தை கூறியுள்ளேன். உடன்பாடு ஏற்படாததால் நான் திருப்பாச்சேத்தி அழைத்து சென்றுவிட்டேன். 6 பவுன் நகை எதையும் நான் வாங்கவில்லை என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது மனைவி வாய் பேசமுடியாதவா் ஆவாா். எனது மகள் 9 வரை படித்துள்ளாா். என் மகளின் மனவளா்ச்சிக்கு குன்றிய நிலைக்காக மருத்துவம் ஏதாவது செய்திருக்கீறிா்களா என்றால் மருத்துவம் எதுவும் செய்யவில்லை. நீங்கள் சொல்வது மாதிரி இந்த எதிரிகள் எந்த கொடுமையும் செய்யவில்லை. நீங்கள் உங்கள் மகளை

சரியாக வளர்க்காமல் கற்பனையான காரணங்களுக்காக மகளை வாழவிடாமல் தடுக்கீறிர்கள். ஆட்டோ வாங்குவதற்கு பணம் எதுவும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.